முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1122

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.10.2022, செவ்வாய்கிழமை

1. உலகுதனை ஞானவழி மாற்றி
உயர்வான ஞானலோகம் படைக்க
வேலவன் என் சக்தியாக வந்த
வானவர்கள் போற்றும் ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே மாதவ சக்தியே அண்ணலே ஜீவதயவு கூட்டும்
வரம் நிறைந்த கலியுக ஞானியே வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
யானுமே ஞான அறிவுரை ஆசி
ஞானவான்கள் பெருக உன்வழி ஆற்றல்கூடிட
3. கூடிட அற்புதம் நிகழ்த்திட
குருஅரங்கன் உந்தனுக்கு சுபகிருது துலை திங்களில்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 08 ம் நாள் 25.10.2022 செவ்வாய்கிழமை)
ஈடேற்றம் பெற ஆசி தனை உரைப்பேன்
இணையில்லா உன் அவதாரம் என் படைப்பில்
4. என் படைப்பில் உயர்வானது தானப்பா
ஏழாம் படைவீட்டை எந்தனுக்கு நிறுவி
இணையில்லா ஞானம் நிறைந்த தொண்டர் படைகளை
இந்த உலகமெல்லாம் நிரப்பி மக்களை மீட்டிட
5. மீட்டிட அற்புதம் நடத்துகின்ற
மாதர்மவழி கொண்ட அரங்கனே உன் சேவை
சேவைதான் கலியில் சிறந்ததாகும் சேவகர்களாய் உன்வழி வரும் தொண்டர் மக்களே
அவனியை காக்கும் மகா சக்திகளாகும் ஆற்றல்பட இந்த சேவை பெருகினால்
6. பெருகினால் தான் அகிலத்தில் அழிவு அகலும்
பெருகினால் தான் அகிலத்தில் மாற்றம் நிகழும்
தர்மமொடு முருகப்பெருமான் என் வழிபாடு
தவராஜன் உன்னால் உலகமெங்கும் நிலைக்கப்பட்டு
7. நிலைக்கப்பட்டு உலகோர்கள் ஞானிகளாக
நிலமதனில் உன்னால் உருவாக்கப்பட்டு
அழியாமை கொண்ட ஞான லோகமாக ஆறுமுகன் என் தலைமைகண்ட ஞான யுகமாக
ஆகவே மாற்றம் சடுதி காணும் அரங்கனே உன்னால் இந்த அற்புதம் நிகழும்

விளம்பிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–